இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

************

<u>ஊடக அறிக்கை</u>

**மத்திய மாகாணத்தில் இந்திய உதவியுடனான திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டல் : ஹட்டன் வெளி ஓயாவில் இந்திய வீட்டுத்திட்டம் மற்றும் தொண்டமான் தொழில் பயிற்சி நிலைய (TVTC) கேட்போர் கூடம்.**

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் கௌரவ ரமேஷ் பத்திரண , சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஆறுமுகம் தொண்டமான் மற்றும் இலங்கைக்கான பதில் இந்திய உயர் ஸ்தானிகர் திரு . விநோத் கே ஜேக்கப் ஆகியோர் இணைந்து ஹட்டன் வெளி ஓயா தோட்டப் பிரிவில் 2020 பெப்ரவரி 16 ஆம் திகதி நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் 50 வீடுகளுக்கான இந்திய வீட்டுத்திட்டம் ஒன்றுக்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தனர் . தோட்டத்தொழிலாளர்களுக்காக பெருந்தோட்டப் பகுதிகளில் இந்தியாவால் அமைக்கப்படும் 14000 வீட்டுத்தொகுதிகளின் ஓர் அங்கமாக இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இதே நாளில் ஹட்டனில் உள்ள தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்துக்கான பல்நோக்கு அடிப்படையிலான கேட்போர் கூடத்துக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது . இந்திய அரசாங்கத்தினால் குறித்த நிலையத்தின் மேம்படுத்தல் பணிகளுக்காக வழங்கப்படும் 199 மில்லியன் இலங்கை ரூபா நிதி உதவியின் கீழ் இந்த புதிய கட்டடம் அமைக்கப்படுகிறது . அதற்கு சமாந்தரமாக கற்கை நெறிகளுக்கான இயந்திரங்கள் , உபகரணங்கள் மற்றும் கருவிகள் , தளபாடம் மற்றும் வாகனங்கள் ஆகியவையும் வழங்கப்படுகின்றன.

இந்த திட்டம் நிறைவடையும் நிலையில் தொழில் சந்தைக்கு பொருத்தமான செயல்திறன்மிக்க தொழிலாளர்களாக இந்தநிலையத்தின் மூலமாக இலங்கை இளைஞர்கள் பயிற்சியினை பெறுவார்கள் என்று இந்திய உயர் ஸ்தானிகராலயம் எதிர்பார்க்கின்றது . தொழில் பயிற்சி மற்றும் திறன் விருத்தி செயற்பாடுகளில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி உதவும் இந்திய அரசின் முயற்சிகளின் ஓர் அங்கமாக இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களின் அடிப்படையில் இந்த திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன . இந்தியா இதுவரை 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அபிவிருத்தி உதவி திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன் இவற்றில் 560 மில்லியன் அமெரிக்க டொலர் முற்றுமுழுதான நன்கொடைத் திட்டங்களாக வழங்கப்பட்டுள்ளன.

*****

கொழும்பு

16 பெப்ரவரி 2020